சார்பு நீதிமன்றம், குளித்தலை.

முன்னிலை : – திரு.ஈ.முத்துசாமி பி.ஏ., பி.எல்.,

சார்பு நீதிபதி, குளித்தலை.

2025–ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 15–ஆம் தேதி திங்கட்கிழமை

இ.ம.எண்.11/2025 இன் இ.ம.எண்.2/2023 இன்

இ.ம.எண்.1/2022 இன் அ.வ.எண்.225/2022

P.யோகநாதன் ... மனுதாரர்/எதிர்மனுதாரர்/ வாதி

/எதிர் /

1. P.சக்திவேல் ... எதிர்மனுதாரர்/மனுதாரர்/ மூன்றாம் நபர்

2. K.வாசு

2. V.கார்த்திக் ... எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/ பிரதிவாதிகள்

உத்தரவு

மனுதாரர் தரப்பில் இம்மனுவானது பிரிவு 151 சி.பி.சி.–ன் கீழ், மூன்றாம் நபர் தாக்கல் செய்த படி செலுத்த வேண்டியதற்கான கட்டளையை நிறுத்தி வைக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

மனு தாக்கல் செய்த நாள்	:	29.08.2025
இறுதி விசாரணை நடைபெற்ற நாள்	:	12.12.2025
உத்தரவு பகரப்பட்ட நாள்	:	15.12.2025
மனுதாரருக்காக	:	திரு.S.சுதாகர் – வழக்கறிஞர்
முதல் எதிர்மனுதாரருக்காக	:	திரு.தமிழ்செல்வன் – வழக்கறிஞர்
இரண்டு, மூன்றுஎதிர்மனுதாரர்களுக்காக	:	திரு.R.M.செந்தில் – வழக்கறிஞர் ஆஜராகி, பின்னிட்டு எதிருரை தாக்கல் செய்யாததால் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

1) மனுவின் சுருக்கம் :–

இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி. இந்நீதிமன்றமானது முதலில் வழக்கு சொத்தினை பற்றுகை செய்யப்பட்டதற்கு பின்னர், மூன்றாம் நபர் மனு தாக்கல்

செய்ய, மேற்படி மனுவானது இ.ம.எண்.2/2023 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்டுள்ளது. வழக்கு சொத்தின் சர்வே எண் கூட்டாக உள்ளது. மேலும், காலி இடமாகவும், தனியாக நான்கெல்லையும் இல்லை. எனவே, இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை நிறைவேற்ற இயலாது. இந்நீதிமன்றம் பிறப்பித்த உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு தாக்கல் செய்ய வேண்டியுள்ளதால், மூன்றாம் நபர் தாக்கல் செய்த படி செலுத்த வேண்டியதற்கான கட்டளையை நிறுத்தி வைக்ககோரி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **மூன்றாம் நபர் தாக்கல் செய்த எதிருரையின் சுருக்கம் :–**

மூன்றாம் நபரால் வெளிப்படையாக ஒப்புக்கொள்ளப்படும் சங்கதிகளை தவிர ஏனையவை உண்மையில்லை என மறுக்கப்படுகிறது. மனு சங்கதிகளை மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். நீதிமன்றம் ஆவணங்களை பரிசீலனை செய்தே இ.ம.எண்.2/2023 என மனுவினை அனுமதித்துள்ளது. மனுதாரர் அவரது உரிமையினை கோருவதற்காகவே இந்நீதிமன்றத்தில் இ.ம.எண்.2/2023 என ஒரு உத்தரவினை பெற்றுள்ளார். முதல் எதிர்மனுதாரர் மீது மட்டும் ஆட்சேபணை கடிதத்தினை மனுதாரர் கொடுக்கவில்லை. முதல் எதிர்மனுதாரருடன் சேர்ந்து சத்தியபாமா என்பவரின் இடத்தின் மீதும் ஆட்சேபணை தெரிவித்திருந்தார். நான்கெல்லைகள் குறிப்பிடாமல் எந்தவிதமான ஆவணங்களை பத்திர பதிவுக்கு ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். மனுதாரரின் மனுவினை அனுமதித்தால் முதல் எதிர்மனுதாரருக்கு அளவிட முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடும். எனவே, மனுதாரரின் மனுவினை மூன்றாம் நபர்/எதிர்மனுதாரர் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என கோரியுள்ளார்.

3) இரண்டு, மூன்று எதிர்மனுதாரர்கள் தோன்றா தரப்பினர்களாக கருதப்பட்டுள்ளார்கள்.

4) இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய சங்கதி யாதெனில் இம்மனுவானது அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதேயாகும். இரு தரப்பிலும் சாட்சிகள் விசாரணை செய்யப்படவில்லை. சான்றாவணங்கள் குறியீடு செய்யப்படவில்லை.

5) **தீர்வு :–**

5 (1) இருதரப்பு வாதங்கள் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. இம்மனுவின் மனுதாரர் / வாதியானவர் ஒரு வாசு மற்றும் கார்த்திக் ஆகியோர்கள் மீது புரோநோட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டு, நிலுவையில் இருந்த நிலையில், மேற்படி வாசு மற்றும் கார்த்திக் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்ய மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது இ.ம.எண்.1/2022 என கோப்பிற்கு எடுக்கப்பட்டு, மேற்படி வாசு மற்றும் கார்த்திக் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தானது இந்நீதிமன்றத்தால் கடந்த 03.08.2022–ம் தேதி அன்று பற்றுகை செய்யப்பட்ட நிலையில், ஒரு சக்திவேல் என்கின்ற மூன்றாம் நபர் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தினையும் பற்றுகை செய்யப்பட்டுவிட்டதாகவும், மேற்படி இ.ம.எண்.1/2022 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை ரத்து செய்து, பற்றுகையை நீக்கம் செய்யகோரி இ.ம.எண்.2/2023 என மனு தாக்கல் செய்யப்பட்டு, மேற்படி மனுவானது விரிவான விசாரரணைக்கு பின்னர் மேற்படி சக்திவேல் என்கின்ற மூன்றாம் நபருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்ததை நீக்கறவு செய்ய வேண்டும் என கடந்த 28.08.2025–ம் தேதி அன்று இந்நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்பட, அசல் வழக்கின் வாதியானவர் மேற்படி இ.ம.எண்.2/2023 மனுவில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் அடிப்படையில் மூன்றாம் நபருக்கு பாத்தியப்பட்ட சொத்தினை பற்றுகை செய்ததை நீக்கறவு செய்யக்கூடாது என கூறி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5 (2) கடந்த 28.08.2025–ம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட உத்தரவினை எதிர்த்து மேல்முறையீடு செய்யப்பட்டது என்பதற்காக எவ்வித ஆவணங்களை எதனையும் நாளது தேதி வரை மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவில்லை. மனுதாரர் மனுவில் கூறியுள்ள சங்கதிக்கு ஆதரவாக ஆவணங்கள் எதனையும் தாக்கல் செய்யவில்லை. மனுதாரர் மனுவில் கூறியுள்ள காரணங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாகவும், நம்பதகுந்ததாகவும் இல்லை. இம்மனுவை அனுமதிப்பதால் மனுதாரருக்கு எவ்விதத்திலும் இழப்பு ஏற்படபோவதில்லை. எனவே,

இம்மனுவின் தன்மை மற்றும் சூழ்நிலையை கருத்தில் கொண்டு, இம்மனுவை தள்ளுபடி செய்யலாம் என முடிவு செய்யப்படுகிறது.

6) **முடிவாக,**

(அ) இம்மனுவானது தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது.

(ஆ) செலவுத் தொகை இல்லை.

(இ) இ.ம.எண்.2/2023–ல் பிறப்பிக்கப்பட்ட பற்றுகை உத்தரவினை நீக்கறவு செய்வதற்காக தாக்கல் செய்யப்பட்ட படியினை உரிய சார்பதிவாளர் அலுவலகத்திற்கு அனுப்ப உத்தரவிடப்படுகிறது.

இந்த உத்தரவு, என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு, 2025–ம் ஆண்டு டிசம்பர் மாதம் 15–ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.15 18:54:43 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.

மனுதாரர்கள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :– இல்லை
எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் :– இல்லை

MUTHUSAMY ESWARAN

Digitally signed by MUTHUSAMY ESWARAN
DN: cn=MUTHUSAMY ESWARAN, ou=GOVERNMENT OF TAMILNADU, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.12.15 18:54:46 +0530

சார்பு நீதிபதி,
குளித்தலை.